
**ஜனவரி – 25**

# TNPSC துளிகள்

- 9வது தேசிய மகளிர் பனிக் கட்டி மைதான ஹாக்கி சாம்பியன்சிப் போட்டியானது (2022) இமாச்சலப் பிரதேசத்தின் லாஹூல் ஸ்பிதி மாவட்டத்தில் உள்ள காசா என்னும் இடத்தில் அமைந்த பனிச் சறுக்கு மைதானத்தில் தொடங்கப் பட்டது.
    - இந்த மாநிலத்தில், தேசிய அளவிலான பனிக் கட்டி மைதான ஹாக்கிப் போட்டிகள் மற்றும் மேம்பாட்டு முகாம்கள் நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- BRICS அறிவியல் தொழில்நுட்பப் புத்தாக்க வழிகாட்டு குழுவின் சந்திப்பானது, 2022 ஆம் ஆண்டில் இந்தியா 5 நிகழ்ச்சிகளை நடத்தும் என்று முடிவெடுத்துள்ளது.
    - இந்த நிகழ்ச்சியின்போது, இந்தியா தனது தலைமைப் பொறுப்பினை சீனாவிடம் (2022 ஆம் ஆண்டு ஜனவரி முதல் பொறுப்பேற்பு) ஒப்படைத்தது.
- முழுவதும் ஆப்பிரிக்காவிலேயே உருவாக்கப்பட்ட தனது முதல் செயற்கைக் கோள் தொகுப்பினை தென் ஆப்பிரிக்கா விண்ணில் ஏவியுள்ளது.
    - இதில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மூன்று நுண் செயற்கைக் கோள்களானது அமெரிக்காவிலுள்ள கேப் கேனவரல் (Cape Canaveral) எனுமிடத்திலிருந்து விண்ணில் ஏவப் பட்டன.
- அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனமானது, சமீபத்தில் கோவிட்-19 தொற்றினால் பாதிக்கப்படும் குழந்தைகள் குறித்த ஆய்வினை மேற்கொண்டது.
    - பருவ வயதினரை விட இளம்பருவத்தினர் குறைவான இறப்பு வாய்ப்பு மற்றும் குறைவான அறிகுறிகளையே கொண்டுள்ளனர் என இந்த ஆய்வு கூறுகிறது.
- மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஜம்மு & காஷ்மீரில், ஜம்மு மாவட்டம் முதல் இடத்தில் உள்ள, மாவட்ட நல்லாட்சிக் குறியீட்டினை அறிமுகம் செய்தார்.
    - இதன் மூலம் இது போன்ற குறியீட்டினைப் பெற்ற முதல் ஒன்றியப் பிரதேசமாக ஜம்மு & காஷ்மீர் மாறியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## உலகத் தலைவர்கள் – உலகத் தரவரிசை




- உலகத் தலைவர்களில் 71% அங்கீகாரத்துடன் மார்னிங் கன்சல்ட் என்ற குழுமத்தின் உலகத் தரவரிசையில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் முதலிடத்தைப் பெற்று

உள்ளார்.


- 13 உலகத் தலைவர்களை உள்ளடக்கிய உலகின் மிகப் பிரபலமான தலைவர்கள் என்ற பட்டியலில் அமெரிக்க அதிபர் ஜோ பிடன் 6வது இடத்தினைப் பெற்றுள்ளார்.
- இவரைத் தொடர்ந்து கனட நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ மற்றும் ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்காட் மோரிசன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

## ஊதாப் புரட்சி




- “ஊதாப் புரட்சி” என்பது “புத்தாக்க நிறுவனங்கள் இந்தியா” திட்டத்திற்கு ஜம்மு & காஷ்மீரின் பங்களிப்பாகும்.
- இந்தியாவில் “ஊதாப் புரட்சி” என்பது அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் மூலம் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தினால் தொடங்கப் பட்ட நறுமணப் பொருட்கள் திட்டத்தின் விளைவாக உதித்ததாகும்.
- ஊதாப் புரட்சியானது காஷ்மீர் இமாலயப் பகுதிகளில் லாவென்டர் தாவரத்தினை ஒரு புதிய நறுமணப் பயிராக விளைவிக்கப்படும் திட்டத்தை உள்ளடக்கியதாகும்.

## சூரியக் கழிவுகள் குறித்த அறிக்கை




- 2030 ஆம் ஆண்டிற்குள், இந்தியா 34,600 டன்களுக்கும் மேலாக சூரியக் கழிவுகளை உருவாக்கும் என இந்தியத் தேசிய சூரியசக்திக் கூட்டமைப்பின் அறிக்கை கூறுகிறது.
- சூரியக் கழிவு என்பது புறம் வீசப்பட்ட சூரியமின் தகடுகளால் உருவாக்கப்படும் ஒரு மின்னணுக் கழிவுகளாகும்.
- இந்தியாவிலுள்ள மிகப் பிரபலமான தொழில்நுட்பப் பிரிவுகளான படிகமாக்கப்பட்ட சிலிக்கான் (C-Si) மற்றும் மென் படலம் (பெரும்பாலும் கேட்மியம் டெல்லுரைடு) ஆகியன முறையே 93% மற்றும் 7% பங்குகளை இதில் வகிக்கின்றன.
- இரு தொழில்நுட்பங்களும் 85 முதல் 90% வரையிலான மீட்சி வீதங்களைக் கொண்டு

உள்ளன.

- ஆனால் குப்பைக் கிடங்குகளில் வீசப்படும் மின்தகடுகளை மறுசுழற்சி செய்வதற்கும் அவற்றை அப்புறப்படுத்துவதற்கும் இடையே உள்ள பெரிய செலவின இடைவெளியே, அவை போதுமான அளவு மறுசுழற்சி செய்யப்படாததற்குக் காரணமாகும்.

## மேம்படுத்தப்பட்ட இலகுரக ஹெலிகாப்டர் ஏற்றுமதி – மொரீசியஸ்




- ஹிந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் லிமிடெட் நிறுவனமானது மொரீசியஸ் அரசுடன் ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- இது மொரீசியஸ் காவற்படைக்காக வேண்டி MK-III எனும் ஒரு மேம்படுத்தப்பட்ட இலகு ரக ஹெலிகாப்டரை ஏற்றுமதி செய்வதற்கான ஒரு ஒப்பந்தமாகும்.
- மொரீசியஸ் அரசானது, ஹிந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்ட மேம்படுத்தப்பட்ட இலகுரக ஹெலிகாப்டர் மற்றும் டோர்னியர் டூ-228 வகை விமானத்தை இயக்கி வருகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## அருமண் தனிம வழங்கீடு குறித்த அமெரிக்காவின் மசோதா

- இவ்வகையான உலோகங்கள் அனைத்தின் மீதும் சீனா ஒரு வலுவான ஆதிக்கத்தை அல்லது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில், அமெரிக்காவின் 80% என்ற அளவில் அருமண் தனிமங்கள் (உலோகங்கள்) சீனாவிலிருந்து கொண்டு வரப்பட்டன.
- அருமண் உலோகங்களுக்காக சீனாவைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதையே இந்த மசோதா ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அருமண் உலோக வழங்கீட்டில் குறைபாடு ஏற்படும் அச்சுறுத்தல்களிலிருந்து அமெரிக்காவைக் காப்பதற்கு இது அவசியமான ஒன்றாகும்.

## ஐந்து எச்சரிக்கைகள்

- 2022 ஆம் ஆண்டில் உலக நாடுகள் 5 பெரும் இடர்களைச் சந்திக்க உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை சமீபத்தில் அறிவித்துள்ளது.

- அவை ஐந்து எச்சரிக்கைகள் – உலகளாவிய இடர் (Five-alarm global fire) எனக் குறிப்பிடப் படுகின்றன.
- அவையாவன
    - கோவிட்-19 பெருந்தொற்று,
    - இணைய வழியில் நிகழும் சட்டவிரோத செயல்கள்,
    - பருவநிலை நெருக்கடி,
    - உலக நிதி அமைப்பின் திவால் நிலை மற்றும்
    - சீர்குலைந்த அமைதி மற்றும் பாதுகாப்பு.
- இந்த இடர்களைத் தடுப்பதற்கு (அ) குறைப்பதற்கு வேண்டி ஐக்கிய நாடுகள் சபை சில பரிந்துரைகளை வழங்கியுள்ளது. அவை
    - உலக நாடுகள் அவசர கதியில் செயல்பட வேண்டும்.
    - பருவநிலை நெருக்கடியைச் சமாளிப்பதற்கு திடீர் நடவடிக்கைகள் அவசியம்.
    - இந்தப் பத்தாண்டின் இறுதியில் உலக நாடுகளின் உமிழ்வானது 45% அளவு வரை குறைக்கப் பட வேண்டும்.




# மாநிலச் செய்திகள்

## மின்னிலக்க முன்னெடுப்புகள் – குஜராத் உயர்நீதிமன்றம்

- குஜராத் உயர்நீதிமன்றத்திற்கான இரண்டு மின்னிலக்கச் சேவைகளான “நீதிக் கடிகாரம்” மற்றும் “நீதிமன்றக் கட்டணங்களை மின்னணு முறையில் செலுத்துதல்” போன்றவை சமீபத்தில் தொடங்கப்பட்டன.
- நீதிக் கடிகாரம் என்பது உயர்நீதிமன்ற வளாகத்தினுள் பொருத்தப்பட்ட ஒரு LED திரை ஆகும்.
- நீதிக் கடிகாரமானது, அம்மாநில உயர்நீதிமன்றம் ஆற்றியப் பணிகளை, தெரியப் படுத்துதல் மற்றும் மிகைப்படுத்துதல் போன்றவற்றிற்காக வேண்டி குஜராத்தில் மேற் கொள்ளப்பட்ட நீதி வழங்கீட்டு முறையின் முக்கியப் புள்ளிவிவரங்களை காட்சிப் படுத்தும்.

- இணையவழி நீதிமன்றக் கட்டண முறையானது, மின்னணு பணவழங்கீடு மற்றும் PDF வடிவிலான ரசீது ஆகியவற்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் நீதிமன்ற முத்திரைகளைப் பெறுவதற்கு வழக்கறிஞர் மற்றும் வழக்குத் தரப்பினர்களுக்கு வழி வகுக்கும்.


# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சர்வதேச நாட்டுப்புறக் கலை திருவிழா




- மகாராஷ்டிராவைச் சேர்ந்த லாவ்னி கலைஞரான, ஃபுல்பாரி தாலுக்காவைச் சேர்ந்த சுமித் பாலே துபாயில் நடைபெற்ற ஒரு சர்வதேச நாட்டுப்புறக் கலை விழாவில் தங்கப் பதக்கத்தினை வென்றார்.
- லாவ்னி என்பது மகாராஷ்டிராவில் பிரபலமான ஒரு இசை வகையாகும்.
- இது பாரம்பரியப் பாடல் மற்றும் நடனம் ஆகியவற்றின் ஒரு கலவையாகும்.
- இது குறிப்பாக தோல்கி எனும் ஒரு தாள வாத்தியத்தின் தாளத்திற்கு ஏற்ப நிகழ்த்தப் படுகிறது.

## ஹர்கோபிந்த் கோரானா




- சமீபத்தில், ஒரு உயிரி வேதியியலாளரும் மற்றும் வேதியியல் உயிரியியலாளருமான ஹர்கோபிந்த் கோரானாவின் 100வது பிறந்த நாளானது அனுசரிக்கப்பட்டது.

- இவர் மார்ஷல். W என்பவருடன் இணைந்து, 1968 ஆம் ஆண்டில் உடலியல் அல்லது மருத்துவத்திற்கான நோபல் பரிசினைப் பெற்றார்.
- நோபல் பரிசுடன் சேர்த்து, ஆல்பெர்ட் லஷ்கர் அடிப்படை மருத்துவ ஆராய்ச்சி விருது (1968) மற்றும் தேசிய அறிவியல் பதக்கம் (1987) ஆகியவற்றினையும் இவர் வென்று உள்ளார்.
- இந்திய அரசானது 1969 ஆம் ஆண்டில் இவருக்கு பத்ம பூசன் விருதினை வழங்கியது.

# விளையாட்டுச் செய்திகள்

## ICC ஆடவர் டெஸ்ட் போட்டிக்கான 2021 ஆம் ஆண்டின் சிறந்த அணி

- ICC ஆடவர் டெஸ்ட் போட்டிக்கான 2021 ஆம் ஆண்டின் சிறந்த அணியில் 3 இந்தியர்கள் குறிப்பிடப் பட்டுள்ளார்.
- 11 பேர் கொண்ட இந்த அணியில் இடம்பெற்ற இந்திய வீரர்கள் ரிசப் பந்த், R. அஷ்வின் மற்றும் ரோகித் சர்மா ஆகியோராவர்.
- நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சன் ICC டெஸ்ட் போட்டியின் அணித் தலைவராக தேர்வு செய்யப் பட்டுள்ளார்.




## சையது மோடி பேட்மிண்டன் சாம்பியன்சிப் 2022


- இந்திய பேட்மிண்டன் வீராங்கனையான P.V. சிந்து இந்த சாம்பியன்சிப் போட்டியின் மகளிர் ஒற்றை இறுதிப் போட்டியில் வென்றார்.
- இந்தப் போட்டியானது உத்தரப் பிரதேசத்தின் லக்னோவில் உள்ள பாபு பனாரசி உள் விளையாட்டு அரங்கில் நடத்தப் பட்டது.
- 35 நிமிடங்கள் நீடித்த இந்த இறுதிப் போட்டியில், மால்விகா பன்சாத் என்பவரை சிந்து வீழ்த்தினார்.
- 2022 ஆம் ஆண்டிற்கான சையது மோடி பேட்மிண்டன் சாம்பியன்சிப் போட்டியின் இரட்டையர் கலப்புப் பிரிவில் இந்தியாவைச் சேர்ந்த இசான் பட்நாகர் - டானிஷா

காஸ்ட்ரோ ஆகியோரின் இணையானது வெற்றி பெற்றது.




# முக்கிய தினங்கள்

## பராக்கிரம் திவாஸ் – ஜனவரி 23




- நேதாஜி சுபாஷ் சந்திர போஷ் அவர்களின் பிறந்த நாளான ஜனவரி 23 ஆம் தேதியினை பராக்கிரம் திவாஸ் என்ற தினமாக கொண்டாடுவதற்கு இந்திய அரசு முடிவு செய்து உள்ளது.
- இந்த ஆண்டு நேதாஜி சுபாஷ் சந்திர போஷ் அவர்களின் 125வது பிறந்த நாளாகும்.
- நேதாஜி அவர்கள் ஒடிசாவிலுள்ள கட்டாக் என்னுமிடத்தில் 1897 ஆம் ஆண்டு ஜனவரி 23 அன்று பிறந்தார்.
- இவர் 1921 ஆம் ஆண்டில் இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.
- இவர் "சுயராஜ்ஜியம்" (சுவராஜ்) எனும் பத்திரிக்கையைத் தொடங்கினார்.
- இவர் "The Indian Struggle" எனும் ஒரு புத்தகத்தினை எழுதியுள்ளார்.
- "ஜெய்ஹிந்த்" எனும் முழக்கத்தினை நேதாஜி சுபாஷ் சந்திர போஷ் அவர்களே முதலில் முழங்கினார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★